# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள். 01.07.2026</u>

## <u>முன்னிலை</u>

**திரு. அபய் குமார் சிங், இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 4716/F/2024</u>**

திரு.S.ஜோதி வெங்கடேசன் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியரகம்,
கிருஷ்ணகிரி - 635 115.

### <u>இறுதி ஆணை</u>

இவ்வழக்கின் மீதான நேரடி விசாரணை 14.05.2026 அன்று மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திரு.V.குமார், தலைமை உதவியாளர் / துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் இன்று (01.07.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.அ.சாதனைக்குறள், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.சுந்தரராஜன், துணை ஆட்சியர் / கொச்சின் - சேலம், பைப்லைன் திட்டம், கோயமுத்தூர் மாவட்டம் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. மேலும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தில் வழக்கு எண்.SA 8938-F-2025, நாள் 27.05.2026

நாளிட்ட ஆணையின்படி பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டு இது தொடர்பாக முற்றாக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகலினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இதனை ஆணையம் பதிவு செய்து அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினையும் ஏற்று செய்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA 4716/F/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),
   **மாவட்ட ஆட்சியரகம்,**
   **கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 115.**

2. **அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் /**
   **மாவட்ட ஆட்சியரகம்,**
   **கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 115.**
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**மனுதாரர்**

திரு.ஜோதி வெங்கடேசன்,
த/பெ.சத்திய நாராயணன்,
எண்.68/A1, ஜெய் சங்கர் காலணி,
ஓசூர் நகரம், ஓசூர் வட்டம்,
கிருஷ்ணகிரி - 635 109.
Phone - 90429 91074.

**நகல்**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RV/PA